# துன்ப நேரத்தில்




நமக்கு வாழ்க்கையில் எல்லாம் சரியாக நடந்து கொண்டிருக்கும் நேரத்தில், நாம் சார்ந்திருக்கிற மற்றும் பழகுகிற மனிதர்கள் முதற்கொண்டு, நம்முடைய தீர்மானங்கள், வாழ்க்கைமுறை ஆகிய அனைத்தும் சரியானதாகவே நமக்கு தோன்றும். ஆனால், வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாரா நிகழ்வுகள், சில விபத்துக்கள், வியாதிகள், பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றால் ஏற்படும் துன்ப சூழ்நிலைகளில், நம்முடைய ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் ஆகிய மூன்றும் செயல் இழந்து இருக்கும் நிலையில், இனிவரும் வாழ்நாட்களை எப்படி கடத்தப் போகிறோம், இனி என்ன செய்ய போகிறோம், எப்படி இந்த துன்ப சூழலில் இருந்து வெளியே வரப்போகிறோம் என்று தெரியாத நிலையில், நாம் நம்முடைய வாழ்க்கையில் எடுத்த தீர்மானங்களை, நம்முடைய வாழ்க்கை முறையை நோக்கி பார்க்கும்பொழுது, நாம் எத்தனை காரியங்களில் தவறி இருந்திருக்கிறோம், எவ்வளவு அஜாக்கிரதையாய் இருந்திருக்கிறோம் என்பது விளங்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நம்மை சுற்றியுள்ள மனிதர்களின், நம்மை பற்றிய மனநிலை எப்படியாக மாறி போகிறது என்பதையும் நாம் காணலாம். இத்துன்ப நேரத்தில் நமக்காக யாரும் ஒரு சொட்டு கண்ணீர் வடிக்கமாட்டார்களா என்று நினைக்கும்பொழுது, நாம் எவ்வளவு பெரிய முட்டாள் என்பதையும், எப்படிப்பட்ட உலகத்தில் நாம் வாழ்கிறோம் என்பதையும் அப்பொழுது நாம் உணர்ந்துகொள்வோம். நாம் சிரித்த போது, சிரித்த உலகம், நாம் அழுகிற போதும் சிரித்து கொண்டே

இருக்கும். அப்பொழுது தான், நமக்காக உலகம் சிரிக்கவும் இல்லை, நமக்காக அது அழபோவதும் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வோம்.

ஆண்டவரை விட்டு, இறை ஐக்கியத்தை குறித்து எதுவும் கவலைப்படாமல், உலகத்திற்காக நாம் ஓடின ஓட்டங்களும், செலவழித்த நேரங்களும் வீண் என்பதை நாம் நம்முடைய துன்ப நேரத்திலேயே உணர்ந்துகொள்கிறோம். எல்லாம் லாபமாய் இருந்த பொழுது நம்மோடு கரம் கோர்த்து உழைத்த கைகள் எல்லாம், சிறு நஷ்டம் ஏற்பட்டவுடன் நம்மை கைவிட்டு செல்வதை நம்முடைய துன்ப நேரத்திலேயே உணர்ந்து கொள்கிறோம். நம்மால் போஷிக்கப்பட்டு, நம்மை சார்ந்திருந்த இரத்த உறவுகள் கூட நம்மை விட்டு செல்கின்றனர். வாழ்க்கையில் என்ன சாதித்தும், யாருக்கு எதை கொடுத்தும் என்ன பயன். நன்றி இல்லாத உலகில் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் மாயையாகவே காணப்படும். ஏற்கெனவே துன்பத்தில் இருக்கும் நமக்கு, நடைபெறும் இப்படிப்பட்ட காரியங்கள் மேலும் மேலும் நம்முடைய துன்பத்தை அதிகரிக்க செய்து, இனி வாழ்ந்து என்ன பயன் என்ற முடிவிற்கே நம்மைகொண்டு போய் விடுகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் யோபு, ஆபிரகாம் மோசே, தாவீது, எலியா போன்ற பல தேவ மனிதர்களின் வாழ்க்கையிலும், இப்படிப்பட்ட காரியங்களே நடந்தது. அதனால் தான், தாங்கள் வாழ்ந்தது போதும் என்ற முடிவிற்கே வரும் அளவிற்கு வாழ்க்கையில் உண்டான துன்ப நேரங்கள் தேவ மனிதர்களை செயலிழக்க செய்தது.

ஆனால் நாம் அழுதால், நம்மோடு அழ நமக்கு ஒருவர் இருக்கிறார். லாசரு மரித்தபொழுது, அவனுடைய சகோதிரிகளான மார்த்தாளும், மரியாளும் இப்படிப்பட்ட வேதனைக்குள்ளாகவே சென்றனர். ஒருவேளை அவர்களோடு சேர்ந்து சிலர் அழுதாலும் **(யோ 11:33)**, அவர்களுக்கு எந்தவிதத்திலும் உதவ கூடியவர்களாய் இவர்கள் இல்லை. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களுக்காக கண்ணீர் விட்டபொழுது **(யோ 11:35)**, அவர்களுடைய கண்ணீர் மாறியது. இங்கு நாம் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான சத்தியம் என்னவெனில், ஆண்டவர் அவர்களிடத்திற்கே வந்து அவர்களுக்காக இத்தனை கரிசனையாய் கண்ணீர் விட காரணம், ஆண்டவரோடு அவர்களுக்கு இருந்த ஐக்கியமே ஆகும்.

**யோ 11:5** கூறுகிறது **"இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்."** என்று. ஆம் அவர்கள் அவருடைய அன்பிற்கு பாத்திரமாய் இருந்தார்கள். எனவே

எதிர்பாராத துனப சூழ்நிலையிலும், யாரும் உதவ முடியாத நேரத்திலும், ஆதரவு அற்றவைகளாய் இருந்த அந்த இரண்டு சகோதரிகளுக்கு ஆண்டவர் அற்புதம் செய்தார், ஆதரவாய் லாசருவை மறுபடியும் எழுப்பி தந்தார்.

தாவீதின் வாழ்க்கையிலும் பல சோதனைகள், வேதனைகள், துன்ப நேரங்கள் வந்த பொழுதும், இதுவே நடந்தது. **1 சாமு 30:1,2** வசனங்கள் கூறுகிறது **"தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம் நாளிலே, சிக்லாகுக்கு வந்து சேருகிறதற்குள்ளே, அமலேக்கியர் தென்புறத்துச் சீமையின்மேலும் சிக்லாகின்மேலும் விழுந்து, சிக்லாகைக் கொள்ளையடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து, அதிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைபிடித்து, ஒருவரையும் கொன்றுபோடாமல், அவர்களைப் பிடித்துக்கொண்டு, தங்கள் வழியே போய்விட்டார்கள்."** என்று.

இதனால் **"தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்." (1 சாமு 30:6)**. இங்கு ஒருபுறம் தாவீதே தன்னுடைய மனைவி, பிள்ளைகளை இழந்து நிற்கிறான், இதனோடு சேர்ந்து, அவனோடு கூட இருந்த மனிதர்களே, இப்பொழுது அவனுக்கு எதிராய் திரும்பினர். எல்லாம் நன்றாய் இருந்த பொழுது அவனேடு கூட நன்மையை அநுபவித்த மனிதர்கள், துன்பம் உண்டானவுடன் பழி முழுவதையும் தாவீதின் மேல் போட்டனர்.

ஆனால் தாவீதோ இப்படிப்பட்ட துன்ப நேரத்திலும், தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டார். ஆண்டவரும் அவரை அத்துன்பத்தில் இருந்து விடுவித்தார். காரணம் ஆண்டவரோடு தாவீது கொண்டிருந்த ஐக்கியமேயாகும். **சங்கீதம் 16:8** இல் தாவீதே இவ்விதம் கூறுகிறார் **"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை."** மோசேயின் மூலமாக, தேவ ஆசீர்வாதத்தை அநுபவித்த இஸ்ரவேல் மக்களும், துன்ப சூழ்நிலைகளில் அவருக்கு எதிராகவே கூக்குரலிட்டனர். ஆனால் மோசே தேவனோடு முகமுகமாய் பேசி உறவாடினவராகையால், எப்படிப்பட்ட துன்ப சூழ்நிலையையும், இஸ்ரவேல் மக்களின் எதிர்ப்பையும் மேற்கொள்ள அவரால் முடிந்தது.

யோபு, எலியா போன்றோரின் வாழ்வில் நடந்ததும் இப்படிப்பட்ட காரியங்களே. எனவே எத்துன்ப நேரத்திலும், நம் துன்பத்தை கண்டு, அத்றகாக பரிதவித்து, நம்மை அதிலிருந்து மீட்க வல்லவர் நம் ஆண்டவர் மட்டுமே ஆகும். அதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், அது அவருடைய ஐக்கியத்தை தேடுவதாகும். அவரோடு பேசியும், அவர் சத்ததிற்கு கீழ்படிந்து வாழ்வதுமாகும். அப்பொழுது மனிதர் நம்மை கைவிட்டாலும், கொடிய துன்பங்கள் நம்மை நெருக்கிட்டாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே நமக்கு போதும். ஆமென், அல்லேலூயா.